# மன நோயாளிக்கு மாதந்தோறும் ₹1000 நிதியுதவி

சென்னை, அக்.13: 'தி பான்யன்' தொண்டு நிறுவனம் சார்பில், உலக மன நல தினத்தை முன்னிட்டு மனநலம் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளுக்கான மூன்றாவது கூட்டத் தொடர், சென்னையில் நேற்று நடந்தது.

'தி பான்யன்' நிறுவனர் வந்தனா பேசுகையில், "இந்தியாவில் 9 சதவீதம் பேரும், தமிழகத்தில் 40 லட்சம் பேரும் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன நோயாளிகளுக்கு மாதம்தோறும் அரசு அளிக்க இருக்கும் நிதியுதவியை ₹1000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்றார்.